ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ ஆகஸ்ட். 20, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 317 ❖ ரூ.10



# இன்று

20-8-2023


ராஜீவ் காந்தி பிறந்தநாள்


சுபமுகூர்த்தம்


சதுர்த்தி விரதம்

சக வருடம் 1945 சிராவணம் 29
காலையில் அருகம்புல் சாறு சாப்பிடுவது மாரடைப்பை தடுக்கும்

| சோபகிருது ஆவணி 3 | AUG - SUN ஞாயிறு | ஸஃபர் 2 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | வளர்பிறை 232 / 133 | மேஷம் - நேசம் |

வளர். சதுர்த்தி 40.55 (மா. 10.27) ஹஸ்தம் 52.55 (கா. 03.15) தியாஜ் 11.05 அகஸ் 30.49 அமிர்த 52.55 மேல் சித்த. விருதுநகர் ஸ்ரீசொக்கநாதர் உற்சவாரம்பம். சுபமுகூர்த்தம். சதுர்த்தி விரதம். மதுரை சோமசுந்தரர் நாரைக்கு முக்தியருளிய காட்சி.


| | நல்லநேரம் | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 1.45-2.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; சிம்ம லக்னம் இருப்பு நா. 4 வி. 55; சந்திராஷ்டமம் பூரட்டாதி
கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.05

இராசிபலன்: மேஷம் - நேசம்; ரிஷபம் - சாந்தம்; மிதுனம் - ஆதரவு; கடகம் - பெருமை; சிம்மம் - சினம்; கன்னி - நிறைவு; துலாம் - ஈகை; விருச்சி - அன்பு; தனுசு - முயற்சி; மகரம் - தனம்; கும்பம் - இன்பம்; மீனம் - உறுதி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

எல்லாம் இருக்கிறது என்று
நம்பிக்கையில் இருப்பவன்
எதுவுமில்லாமல் போனால் இறந்து போவான்;
எதுவுமில்லை என்றாலும்
தன்னம்பிக்கையோடு
இருப்பவன் எல்லாவற்றையும் பெறுபவன் ஆவான்;



புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை- 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,450 | Rs. 5,920 |



# மதுரையில் இன்று நடைபெறும் அதிமுக மாநாட்டில் பங்கேற்க தமிழகம் முழுவதிலுமிருந்து தொண்டர்கள் குவிந்துள்ளனர்

மதுரை , ஆக. 20-

மதுரையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் அதிமுக மாநில மாநாட்டுக்கு ஏற்பாடுகள் தயாராகியுள்ள நிலையில், தமிழகம் முழுவதிலுமிருந்து தொண்டர்கள் குவிந்துள்ளனர்.

மதுரை அருகேயுள்ள வலையங்குளத்தில் நடைபெறும் மாநாட்டுக்கான மேடை, பந்தல், தொண்டர்களுக்கு உணவு வழங்கும் இடம், கழிப்பறைகள், வாகன நிறுத்துமிடங்கள் உள்ளிட்ட ஏற்பாடுகள் சிறப்பாக திட்டமிடப்பட்டுள்ளது. மாநாட்டுப் பந்தல் வளாகத்தில் 3 லட்சம் தொண்டர்கள் நாற்காலிகளில் அமர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநாட்டு நிகழ்ச்சிகள் எல்இடி திரைகள் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளன. பந்தலைச் சுற்றி 10-க்கும் மேற்பட்ட இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. காலை 7.45 மணிக்கு 51 அடி உயர



கொடிக் கம்பத்தில் பொதுச் செயலாளர் பழனிசாமி கட்சிக் கொடியேற்றி, மாநாட்டை தொடங்கி வைக்கிறார். ஜெயலலிதா பேரவை மற்றும் பிற அணிகளின் தொண்டர்கள் 3,000 பேர் அணிவகுப்பு மரியாதை அளிக்கின்றனர்.

பின்னர் மாநாட்டுப் பந்தலைத் திறந்துவைக்கும் பழனிசாமி, நுழைவுவாயில் அருகே அமைக்கப்பட்டுள்ள அதிமுக அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார். தொடர்ந்து, கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மாநாட்டின் பிரதான நிகழ்ச்சிகள் மாலை தொடங்குகின்றன. கட்சியின் முக்கிய நிர்வாகிகள் 5 பேர், மதுரை மாவட்டச் செயலாளர்கள் செல்லூர் கே.ராஜூ, வி.வி.ராஜன் செல்லப்பா, ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோர் பேசுகின்றனர். பின்னர், பொதுச்செயலாளர் பழனிசாமி சிறப்புரையாற்றுகிறார்.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று மாலையே பழனிசாமி மதுரைக்கு வந்தார். தமிழகம் முழுவதும் இருந்து கட்சி நிர்வாகிகள் வெள்ளிக்கிழமை முதலே மதுரையில் குவியத் தொடங்கிவிட்டனர்.

தமிழகம் முழுவதுமிருந்து தொண்டர்களை அழைத்து வரும்பொறுப்பு, மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 10 தென் மாவட்டங்களில் இருந்து மட்டும் 4 லட்சம் பேர் பங்கேற்க ஏறபாடு செய்துள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 1,500 வாகனங்களில் தொண்டர்களை அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், சுமார் 10 லட்சம்பேர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நீட் தற்கொலைகளை தடுப்பதை விட அதற்கான காரணங்களை அகற்றுவதே சிறந்தது அன்புமணி இராமதாஸ்

**சென்னை , ஆக. 20-**

நீட்டை ரத்து செய்ய வேண்டும் என்று பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- நீட், ஜஇடி-ஜே.இ.இ. உள்ளிட்ட நுழைவுத்தேர்வுகளுக்கு பயிற்சி அளிப்பதில் புகழ்பெற்ற இராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் உள்ள விடுதிகளில், மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க அங்குள்ள மின்விசிறிகளில் ஸ்பிரிங்குகளும், அபாய ஒலி எழுப்பும் கருவிகளும் பொருத்தப்படுவதை நகர நிர்வாகம் கட்டாயமாக்கியிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் வேதனை அளிக்கின்றன. ஆனால், எய்தவன் இருக்க அம்பை நொந்த கதையாக, மாணவர்களின் தற்கொலைகளுக்கான



காரணங்களை கண்டறிந்து அகற்றாமல், தற்கொலைகளை மட்டும் தடுக்க நினைப்பது முழுமையான தீர்வை வழங்காது.

இராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரம் நுழைவுத்தேர்வுகளுக்கான பயிற்சிக்கு பெயர் பெற்றது ஆகும். அந்த நகரில் நீட், ஜஇடி-ஜே.இ.இ. உள்ளிட்ட நுழைவுத்தேர்வுகளுக்கு 40 ஆயிரத்திற்கும் கூடுதலானவர்கள் பயிற்சி பெறுகின்றனர். அவர்களில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள விடுதிகளில் தங்கி பயிற்சி பெறுகின்றனர். நுழைவுத்தேர்வுக்கு தயாராக முடியாதவர்களும், தேர்வில் தோல்வியடைந்தவர்களும் தற்கொலை செய்து கொள்கின்றனர். கடந்த ஆண்டில் 15 பேரும், நடப்பாண்டில் இதுவரை 20 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாட்டை கோட்டா நிர்வாகம் செய்திருக்கிறது.

நுழைவுத் தேர்வு பயிற்சிக்காக ஒவ்வொரு மாணவனும் ரூ.20 லட்சம் வரை செலவழிக்க வேண்டியுள்ளது. இது எல்லா குடும்பங்களுக்கும் சாத்தியம் அல்ல. ரூ.20 லட்சம் செலவழித்த பிறகும் நீட் தேர்வில் வெற்றி பெற முடியாத போது தான், தற்கொலை எண்ணம் தலைதூக்குகிறது. இதிலிருந்து மாணவர்களைக் காக்க நீட், ஜஇடி-ஜே.இ.இ. உள்ளிட்ட அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் ரத்து செய்ய வேண்டும்; மாணவர்களைக் காக்க இதை உடனடியாக செய்யவேண்டும் என்று வலியுறுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437




திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் சார்பில் வாசவி வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் சிவில் நீதிபதி தேர்வு நேற்று நடைபெற்றதை மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



காரைக்கால் மாவட்டத்தில் உள்ள திருநள்ளாறு கோவிலில் சனிக்கிழமையை முன்னிட்டு பக்தர்கள் வருகை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் குறித்தும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மற்றும் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணிஷ் ஆகியோர் திருநள்ளாரில் அமைந்துள்ள புகழ் பெற்ற ஸ்ரீ தர்பாரன்னேஸ்வரர் ஆலயத்தை பார்வையிட்டார்கள். இதில் மாவட்ட ஆட்சியர் பக்தர்கள் வரிசை குறித்தும் பொதுமக்கள் விட்டுச் செல்லும் காலணிகள் பாதுகாப்பு மையத்தை அதிகரிக்கும் படியும் , வரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேப்படுத்தும் படியும் கோயில் நிர்வாக அதிகாரி அருணகிரிநாதனிடம் ஆட்சியர் கேட்டுக் கொண்டார். மேலும் ஆலயத்தின் பல்வேறு பகுதிகளை ஆட்சியர் மற்றும் முதல்நிலை காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

# விழுப்புரம் அருகே இருதரப்பினரிடையே மோதல் சாலை மறியல் போலீஸ் குவிப்பு

விழுப்புரம் , ஆக. 20-

விழுப்புரம் அருகே மேல்பாதியில் திரவுபதி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் கடந்த மே மாதம் திருவிழாவின்போது வழிபடுவதில் இருதரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து கோவில் பூட்டி சீல் வைக்கப்பட்டது. இது தொடர்பாக இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு விழுப்புரம் கோட்டாட்சியர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. மேல்பாதியை சேர்ந்த ஒருவர் கோலியனூர் கூட்டுரோட்டில் உள்ள ஓட்டலுக்கு சாப்பிட வந்தார். அப்போது அதே ஊரை சேர்ந்த 5 பேர் ஓட்டலுக்கு வந்தனர்.



திடீரென அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதுகுறித்து வளவனூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் அங்கு வந்து ஒருதரப்பை சேர்ந்த பிரகாஷ், பிரபு உள்ளிட்ட சிலரை விசாரணைக்காக போலீஸ் நிலையம் அழைத்து சென்றனர். இதனால் அந்த தரப்பை சேர்ந்த பொதுமக்கள் ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் 500-க்கும் மேற்பட்டோர் சென்னை-கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். நேற்று நள்ளிரவு 11.30 மணியளவில் இந்த மறியல் நடந்தது. இதனால் அந்த சாலையில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. சென்னையில் இருந்து கும்பகோணம் செல்லும் பஸ்களும், கும்பகோணத்தில் இருந்து சென்னை வரும் பஸ்களும் நீண்ட வரிசையில் நின்றன.

தகவல் கிடைத்ததும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஷசாங்சாய் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்தனர். அவர்கள் சாலைமறியலில் ஈடுபட்டிருந்த பொதுமக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதையடுத்து மறியலை கைவிட்டனர். அதன் பின்னர் போக்குவரத்து சீரானது. ஏற்கனவே மேல்பாதியில் கோவிலில் வழிபடுவது தொடர்பாக இருதரப்பினரிடையே மோதல் இருந்து வரும் நிலையில் தற்போது இருதரப்பினரிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் மேல்பாதியில் பதட்டமான சூழ்நிலை நிலவி வருவதால் அங்கு அதிரடிப்படை போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

# ஜி.கே.மூப்பனார் பிறந்தநாள் விழா புதுக்கோட்டையில் கொண்டாட்டம்: விவசாய அணி மாநிலத் தலைவர் அழைப்பு

புதுக்கோட்டை, ஆக.20-

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில விவசாய அணித் தலைவர் துவார் சி.ரெங்கராஜன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கபிஸ்தலத்தில் பெரும் விவசாய குடும்ப பாரம்பரியத்தில் பிறத்து இந்திய அரசியலில் மிக பெரிய ஆளுமையாக திகழ்ந்து நேர்மையான அரசியலை கொள்கையாக கொண்டு இந்திய அளவில் அனைத்து மாநில தலைவர்களாலும் போற்றபட்டு இந்திய அரசியலில் கர்மவீரருக்கு பிறகு கிங்மேக்கராக திகழ்ந்து தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு கர்மவீரர் காமராஜர் வழியில் வலிமையான பாரதம் வளமான தமிழகம் என்ற கொள்கையோடு ஏழை எளிய மக்களுக்கு சேவைகள் பல செய்து இந்திய அரசியலில் பல பேரை பதவியில் அமர்த்தி அழகு பார்த்த ஜி.கே. மூப்பனார் பிறந்ததினமான ஆகஸ்ட் 19 அன்று ஆண்டு தோறும் விவசாயிகள் தினமாக கொண்டாடபடுவதை ஒட்டி இந்த ஆண்டு ஆகஸ்ட் 21ம் தேதி நாளை புதுக்கோட்டையில் விவசாயிகள் கருத்தரங்கம் தமாகாதலைவர்மக்கள்தலைவர் ஜி.கே.வாசன் தலைமையில் திருக்கோகர்ணம் பிவிஆர் மகாலில் நடைபெறுகிறது.

அதில் அனைத்து விவசாய அணி பொறுப்பாளர்களும் கலந்து கொள்வதோடு தமாகா விவசாயஅணி சார்பாக அவர் புகழ் ஓங்க ஏழை எளிய மக்களுக்குநலதிட்ட உதவிகள் செய்து சிறப்பாக கொண்டாட வருமாறு வேண்டுகோள் வைத்துள்ளார்.

## பொன்னமராவதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர்

# தொல்.திருமாவளவன் 61-வது பிறந்த நாளையொட்டி கட்சி கொடி ஏற்றி இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



பொன்னமராவதி, ஆக.20-

பொன்னமராவதியில் நகர விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவனின் 61 வது பிறந்த நாளை முன்னிட்டு கல்வெட்டு திறப்பு,கொடியேற்று விழா நடைபெற்றது.

பொன்னமராவதி பேருந்துநிலையம் அருகில் நடைபெற்ற விழாவில் சட்டமேதை அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு நகர விடுதலை சிறுத்தை கட்சியின் சார்பில் மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது, விழாவிற்கு நகரச்செயலாளர் மலை தேவேந்திரன் தலைமை தாங்கினார், நகர துணைச்செயலாளர் பாரத் வரவேற்புரை வழங்கினார், மாநில துணைச்செயலாளர் திலீபன்ராஜா, தொகுதி துணைச் செயலாளர் ரமேஷ் இளந்தமிழன், பொன்.தமிழ்அரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொகுதி துணைச் செயலாளர் சுடர்வளவன் கல்வெட்டினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார், மேற்கு மாவட்டச் செயலாளர், வழக்கறிஞர் வெள்ளைநெஞ்சன் கட்சி கொடியை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார்.

மாணவர் சுகநிலவன் தொல். திருமாவளவனின் எழுச்சிபயணங்கள்பற்றிய வீர உரையாற்றினார், இப்பிறந்த நாள் கொண்டாட்டத்தில் 200-க்கும் மேற்பட்டோருக்கு உணவுகள் வழங்கப்பட்டன, இதில் கிழவயல் ஊராட்சித் தலைவர் அருண், தோழமை கட்சிகள்,பொது மக்கள், விடுதலை சிறுத்தை கட்சியினர் என பலர் கலந்து கொண்டனர்.



மதுரை அதிமுக எழுச்சி மாநாட்டையொட்டி இளம்பெண்கள் பாசறை டாக்டர் பரமசிவம் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. இதில் மாவட்ட இணைச் செயலாளர் சேனாதிபதி மற்றும் மதுபாலன், கலை பிரிவு மாவட்ட செயலாளர் கா. அரசு, பகுதி செயலாளர் செந்தில்குமார் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அதிசய அன்னை ஆலய தேர்பவனி நடைபெற்றது,இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரத்து 523 கனஅடியாக உயர்வு

மேட்டூர் , ஆக. 20-

மேட்டூர் அணையில் இருந்து கடந்த ஜூன் மாதம் 12-ந் தேதியில் இருந்து தொடர்ந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. பாசன தேவைக்காக அணையில் இருந்து தண்ணீர் அதிகரித்தும், குறைத்தும் திறக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு பொய்த்து போனதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்து விட்டது.

அணையில் இருந்து தொடர்ந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருவதாலும், அணைக்கு நீர்வரத்து குறைந்து காணப்பட்டதாலும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென குறைந்தது. இதனால் அணைக்குள் மூழ்கி இருந்த ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தி சிலை, கிறிஸ்துவ ஆலய கோபுரம் ஆகியவை முழுமையாக தெரிய ஆரம்பித்தது. மேலும் அணையின் நீர்தேக்க பகுதிகள் மற்றும் 16 கண் பாலம் ஆகிய இடங்கள் தண்ணீர் இன்றி வறண்டு பாளம் பாளமாக நிலம் வெடித்து காணப்படுகிறது. பண்ணவாடி உள்ளிட்ட நீர்த்தேக்க பகுதிகளில் தண்ணீர் இன்றி புல் முளைத்து காணப்படுகிறது. அந்த பகுதிகளில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டு உள்ளனர். இந்த நிலையில் டெல்டா மாவட்டத்தில் பயிரிட்டுள்ள 3 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடியை காப்பாற்ற கர்நாடகாவில் இருந்து காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக அரசு சார்பில் காவிரி மேலாண்மை ஆணையத்தில் முறையிடப்பட்டது. மேலும் இது



தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்கு தொடரப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கிருஷ்ணராஜ சாகர் அணை, கபினி அணைகளில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு கடந்த 3 நாட்களாக நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. கடந்த 17-ந் தேதி வினாடிக்கு 3 ஆயிரத்து 260 கனஅடி தண்ணீர் வந்தது. அது வெள்ளிக்கிழமை 9 ஆயிரத்து 394 கனஅடியாக அதிகரித்தது. நேற்று காலை நீர்வரத்து வினாடிக்கு 12 ஆயிரத்து 523 கனஅடியாக அதிகரித்து வந்து கொண்டு இருக்கிறது. அதே போல் வெள்ளிக்கிழமை 53.50 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 54.19 அடியாக உயர்ந்து காணப்பட்டது. மேலும் கடந்த ஒரு வாரமாக பாசனத்துக்கு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்று காலை முதல் பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதே போல் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 124.80 அடி உயரமுள்ள கிருஷ்ணராஜ சாகர் அணையின் நீர்மட்டம் 107.66 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 349 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 12 ஆயிரத்து 960 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. 84 அடி உயரம் உள்ள கபினி அணையின் நீர்மட்டம் 77.82 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1764 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகளில் இருந்து மொத்தம் 17 ஆயிரத்து 960 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க எதிர்ப்பு தெரிவித்து கர்நாடக மாநிலம் மண்டியா மாவட்டத்தில் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். மேலும் சிலர் காவிரி ஆற்றில் இறங்கியும் போராட்டம் நடத்தினர்.

**கனம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நீதிபதி அவர்கள் புதுக்கோட்டை**
**ந.க.எண்:/4001/2023/அ6**

குழந்தைவேலு,
S/O அடைக்கலம்,
எண்: 3/262, வெட்டிக்காடு,
கொத்தமங்கலம் கிராமம்
ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.
.....மனுதாரர்

எதிர்
வட்டாட்சியர், ஆலங்குடி.
.....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் **குழந்தைவேலு,** தனது தந்தை அடைக்கலம் என்பவர் கடந்த 21.06.2000-ம் தேதியன்று வீட்டு எண்: 3/262, வெட்டிக்காடு, கொத்தமங்கலம் கிராமம் ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம், என்ற முகவரியில் இறந்ததை பதிவு செய்ய வேண்டி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை அறியவும்.

**குழந்தைவேலு,**
**மனுதாரர்,**
**வீட்டு எண்: 3/262, வெட்டிக்காடு,**
**கொத்தமங்கலம் கிராமம் ,ஆலங்குடி தாலுகா.**

உயர்கல்வியில் பின்தங்கியுள்ளோம்; வேலூர் விஜடி பல்கலைக்கழக வேந்தர்

# முத்திரை

## கடந்த 9 ஆண்டுகளில் 162 நாடுகள் இந்தியாவில் 62 துறைகளில் முதலீடு, நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு, மாணவர்கள் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும்; மத்திய இணை அமைச்சர் வி.கே.சிங் தகவல்




**வேலூர், ஆக. 20-**
**இந்தியாவில் கடந்த 9 ஆண்டுகளில் 162 நாடுகள் 62 துறைகளில் முதலீடு செய்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங் கூறினார்.**

வேலூர் விஜடி பல்கலைக்கழகத்தில் 38-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. 8,619 மாணவர்கள் பட்டம் பெற்ற இந்த விழாவுக்கு, பல்கலை. வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை வகித்தார். அவர் பேசும்போது, "இந்தியாவில்பள்ளிக்கல்வி நன்றாக உள்ள நிலையில், உயர்கல்வியில் பின்தங்கியுள்ளோம். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்கீடு செய்யும் நிலையில், ஏழை மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி பயிலமுடியும். வங்கி கல்விக் கடன்களின் வட்டியையாவது அரசு ஏற்க வேண்டும். உயர் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி, மருத்துவக்கல்வியில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் மருத்துவம் படிக்க ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால், நாட்டில் 700 மருத்துவக் கல்லூரிகளில் ஒரு லட்சம் மருத்துவ இடங்கள்தான் உள்ளன. எனவே, எம்பிபிஎஸ் இடங்களை அதிகரிப்பதால், கூடுதலாக 3 முதல் 4 லட்சம் பேர் மருத்துவம் பயில வாய்ப்புள்ளது'' என்றார்.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங், மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசியதாவது: கற்றதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை பொறுத்துதான் கல்வி அமையும். மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள பிரச்சினைகளைப் பற்றிக் கவலைப்படாமல், அவற்றைக் கையாள கற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசு மக்கள் நலனுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயல் வடிவம் பெறும்போது, இன்னும் அதிக மாணவர்கள் மருத்துவம் படிக்கவாய்ப்பு உருவாகும். உலகஅளவில்இந்தியாவின் பொருளாதாரம் 6.5 சதவீதமாக உள்ளது. இதனால், உலக நாடுகள் இந்தியாவை கவனிக்கின்றன. வரும் 2047-ம் ஆண்டுக்குள் உலகின் முதல்பொருளாதார நாடாக உயரவும் நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது.

2015-ல் இந்தியாவில் 428 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. தற்போது தினசரி ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பதிவு செய்யப்படும் விகிதத்தில், உலகளவில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. இந்தியாவில் முதலீடு செய்ய பல்வேறு நாடுகள் ஆர்வம்காட்டுகின்றன. இந்தியாவின் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கை காரணமாக கடந்த 9 ஆண்டுகளில்62துறைகளில் 162 நாடுகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் முதலீடு செய்துள்ளன.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு, மாணவர்கள் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும். வெற்றிக்காக குறுக்கு வழிகளில் செல்ல வேண்டாம். அறிவாற்றலைப் பயன்படுத்தி, கடின உழைப்பு, தொடர் முயற்சியால் வெற்றி இலக்கை அடைய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விப்ரோ நிறுவன சர்வதேச வர்த்தக தலைமை அதிகாரி (இயக்கம்) சஞ்சீவ் ஜெயின் கவுரவ விருந்தினராகப் பங்கேற்றார். விஜடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி.செல்வம், உதவி துணைத் தலைவர் காதம்பரி ச.விசுவநாதன், துணை வேந்தர் ராம்பாபு கோடாளி, இணை துணைவேந்தர் பார்த்தசாரதி மல்லிக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், உலக புகைப்பட தினத்தையொட்டி பத்திரிகை புகைப்படக் கலைஞர்களை சிறப்பிக்கும் வகையில் நேற்று முகாம் அலுவலகத்தில், அப்புகைப்படக் கலைஞர்களை புகைப்படம் எடுத்து தனது வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளார்.

மதுரை மத்திய சிறையில் சிறைவாசிகளால் நடத்தப்பட இருக்கும்

## பெட்ரோல், டீசல் விற்பனை நிலையத்தை அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்தார்



*மதுரை, ஆக. 20-*

*மதுரை மத்திய சிறை வளாகத்தில் இந்தியன் ஆயில் மற்றும் சிறைத்துறை சார்பில் அமைக்கப்பட்ட Freedom பெட்ரோ / டீசல் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அதனை சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ரகுபதி பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பி விற்பனையை தொடங்கி வைத்தார். விழாவில் சிறைத்துறை டிஜிபி அமரேஷ் பூஜாரி, இந்தியன் ஆயில் தலைமை இயக்குனர் அசோகன் பங்கேற்றனர். மதுரை மாவட்டத்தில் முதன் முறையாக 35 சிறைக் கைதிகளால் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையம் நடத்தப்படுகிறது.*

*நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் அமைச்சர் ரகுபதி பேசும்போது; சிறைச்சாலை ஒரு கைதியை தண்டிக்கிற அல்லது கண்டிக்கிற இடமாக அன்றி திருத்தும் இடமாக அமைய வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தல் படி பல்வேறு திட்டங்கள் மூலம் செயலாற்றி வருகின்றோம். சிறைகளில் சிறைவாசிகள் தயாரிப்பு பொருட்களான சங்கடிச் சேலை, போர்வை, மர சாமான்கள், கலப்படமற்ற எண்ணெய், உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு மக்களிடம் அதிக வரவேற்பை பெற்றுள்ளது. இதன்மூலம் சிறைவாசிகள் ஈடும் வருவாய் கொண்டு கைதிகள் தங்களது குடும்பத்தை நிர்வாகம் செய்து வருகிறார்கள்.*

*சிறைச்சாலையில் இருந்து வெளியே செல்லும் கைதிகள் தகுதிமிக்க, தரமான மனிதர்களாக உருவாக்கப் படுகிறார்கள். சிறைவாசிகளுக்கு ஆக்கம், ஊக்கம் கொடுக்க முதல்வர் அறிவுறுத்தல் செய்துள்ளார். இதுபோன்று மற்ற மாவட்டங்களில் சிறைவாசிகளால் நடத்தப்படும் எரிபொருள் விற்பனை நிலையம் சிறந்த விற்பனை நிலையமாக செயல்படுகிறது. பெண் சிறைவாசிகள் நடத்தும் பெட்ரோல் பங்க் சென்னையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழக முதல்வர் சிறைத்துறை மீது தனி கவனம் எடுத்து கொண்டு இருப்பதால் பல்வேறு திட்டங்கள் எங்களால் செயல்படுத்தப்படுகிறது. பெட்ரோல் / டீடல் விற்பனை நிலையத்தில் கிடைக்கக்கூடிய 80 சதவீத தொகை சிறைவாசிகளுக்கு கொடுக்க முதல்வர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

## 100 ஏக்கர் நிலம் தானமாக கொடுத்தவரின் மணிமண்டபத்திற்கு 2 ஏக்கர் நிலம் கொடுக்க மறுக்கும் திமுக அரசு; அண்ணாமலை விமர்சனம்



**சென்னை , ஆக. 20-**
**100 ஏக்கர் நிலத்தை தானமாக கொடுத்தவரின் மணிமண்டபத்திற்கு 2 ஏக்கர் நிலத்தை கொடுக்க திமுக அரசு கெடுபிடி காட்டுவதாக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்க கூடிய அறிக்கையில் கூறியிருப்பதாவது:**

நூற்றாண்டுகள்தொன்மை வாய்ந்த புதுக்கோட்டை பல சமஸ்தானத்தின் மன்னராக, புதுக்கோட்டை நகரின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய ஐயா ராஜகோபால தொண்டைமான் நூற்றாண்டு விழா கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டது நாம் அறிந்ததே. புதுக்கோட்டை மக்களின் நலனுக்காக, விவசாயம், போக்குவரத்து, நீர்ப்பாசனம் என பல்வேறு துறைகளில் வசதிகளை ஏற்படுத்தித் தந்தவர் மன்னர் ராஜகோபால தொண்டைமான்,

புதுக்கோட்டை சமஸ்தானத்தை, அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் அவர்களது கோரிக்கையை ஏற்று இந்தியக் குடியரசுடன் இணைக்க ஒப்புக்கொண்ட மன்னர் ராஜகோபால தொண்டைமான், அவரது அரச கருவூலத்திலிருந்து, 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான நகைகள் மற்றும் பணத்தை நாட்டுக்கு வழங்கியவர்.

1974 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டபோது, புதுக்கோட்டை ஆட்சியர் அலுவலகம் அமைக்க 100 ஏக்கர் அளவுள்ள நிலத்தையும், தன் சொந்த அரண்மனையையும் வழங்கிய பெருமைக்குரியவர்.

அத்தகைய பெருமை வாய்ந்த மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு நினைவிடம் அமைக்க, ஆட்சியர் அலுவலகம் அமைந்திருக்கும் அவர் தானமாகக் கொடுத்த 100 ஏக்கர் நிலத்திலிருந்து, இரண்டு ஏக்கர் நிலத்தை, நினைவிடம் அமைக்க வழங்க வேண்டும் என்ற மன்னர் குடும்பத்தின் கோரிக்கையை தமிழக அரசு ஏற்காமல், வெறும் 35 சென்ட் நிலம் மட்டுமே ஒதுக்கீடு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

நாட்டுக்காகவும், புதுக்கோட்டை மக்களுக்காகவும் தனது உடைமைகள் அனைத்தையும் கொடுத்த மன்னர் ராஜகோபால் தொண்டைமான் அவர்களது வரலாற்றை இன்னும் பல தலைமுறைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டிய கடமை, தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. மன்னர் தானமாகக் கொடுத்த 100 ஏக்கர் நிலத்தில் இருந்து, அவருக்கு நினைவிடம் அமைக்க 2 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்வதில், தமிழக அரசுக்கு என்ன பிரச்சினை உள்ளது என்பது தெரியவில்லை.

உடனடியாக தமிழக அரசு தனது வீண் பிடிவாதத்தை விட்டு விட்டு. தமிழகத்தின் பெருமை மிகுந்த மன்னர்களில் ஒருவரான, மன்னர் ராஜகோபால தொண்டைமான் அவர்களுக்கு நினைவிடம் அமைக்க, ஆட்சியர் அலுவலகம் அமைந்திருக்கும் நிலத்தில், 2 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்க வேண்டும் என்றும், மன்னர் நினைவிடப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், தமிழக பாஜக சார்பாக வலியுறுத்துகிறேன். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே கோரிக்கையை அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப் பேரவை நிறுவனர் முனைவர் வைர.ந. தினகரனும் விடுத்துள்ளார். அண்மையில் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரரும் அதிமுக சார்பில் இதே கோரிக்கையை விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.



# பெருவாயல் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் இலக்கிய மன்ற துவக்க விழா

ஊத்துக்கோட்டை, ஆக20–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை, பெருவாயலில் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது.

இக்கல்லூரியில் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி துறை செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மற்றும் டி.ஜே. எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் உள்தர உறுதிப் பிரிவு இணைந்து தமிழ் இலக்கிய மன்ற துவக்க விழா, கலைச் சொல்லாக்கம் மற்றும் அகராதியியல் பயிலரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,டி.ஜே.எஸ் கல்வி குழும தலைவர் டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார்.



இதில்,தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சி துறை செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குனர் கோ.விஜயராகவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழ் இலக்கிய மன்றத்தை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் வி.லட்சுமிபதி, இயக்குனர் ஏ.கபிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பதிப்பாசிரியர் தி.பாலசுப்ரமணியன் விளக்க உரையாற்றினார். தொகுப்பாளர் வே.பிரபு நோக்க உரை ஆற்றினார். முன்னதாக அனைவரையும் தமிழ் துறை தலைவர் எல். மகாலட்சுமி வரவேற்றார். முடிவில்,தமிழ் துறை உதவி பேராசிரியர் கு.விஜயன் நன்றி கூறினார்.



அரசு பொது மருத்துவமனையை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி மற்றும் அரசு மருத்துவர்கள் கொண்ட குழுவினர், பொதுப்பணித்துறையை சேர்ந்த செயற் பொறியாளர் சிதம்பரநாதன் தலைமையிலான அதிகாரிகளுடன் பல்வேறு இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்ட காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் புதியதாக அமையவிருக்கும் தீவிர சிகிச்சை பிரிவு (critical care unit) மற்றும் சித்த மருத்துவப் பிரிவு மற்றும் புறநோயாளிகள் பிரிவு (OPD) ஆகிய மூன்று இடங்களையும் பார்வையிட்டு அரசு பொது மருத்துவமனையை மேம்படுத்துவது குறித்து சில ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு வழங்கினார். மேலும் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட டயாலிசிஸ் மையத்தை பார்வையிட்ட ஆட்சியர் கூடுதல் மையங்களை அமைத்தும் அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தவும் ஆலோசனை கூறினார். இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும்படியும் பொதுப்பணித்துறை செயற் பொறியாளரை கேட்டுக் கொண்டார். மேலும் அரசு பொது மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளரிடம் அரசு பொது மருத்துவமனையின் அனைத்து இடங்களையும் சுத்தமாக பராமரிக்குமாறும் வரும் நோயாளிகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்தி தருமாறும் மருத்துவர்கள் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும் என்றும் ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

# ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலில் பணியாற்றி வந்த காவலர் தூக்கிட்டு தற்கொலை

ராமேஸ்வரம், ஆக20–

ராமநாதசுவாமி கோவிலில் பணியாற்றி வந்த காவலர் பணிச்சுமை காரணமாகவே அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக குற்றம்சாட்டி, சக பணியாளர்கள் கோவில் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோவிலில் 100-க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த நிலையில் அங்கு பணியாற்றி வந்த காவலர் நவீன் குமார் என்ற சந்தோஷ் வெள்ளிக்கிழமை இரவு அவர் தங்கியிருந்த அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது இறப்பிற்கு பணிச்சுமையே காரணம் என்றும் இது தொடர்பாக காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி சக பணியாளர்கள் கிழக்கு வாசல் கோபுரத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் போராட்டம் நடத்தியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு சென்றனர்.



# அரியலூர் மாவட்டம் எம்ஆர் கல்லூரியில் உலக புகைப்பட நாள் விழா

அரியலூர், ஆக. 20-

அரியலூர் மாவட்டம் எம்ஆர் கல்லூரியில் உலக புகைப்பட நாள் விழா கொண்டாடப்பட்டது.

அரியலூர் மாவட்டம், தத்தனூர் அருகே உள்ள மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், காட்சித் தொடர்பியல் துறை சார்பில், 184- வது உலக புகைப்பட தினம் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் காட்சி தொடர்பியல் துறை தலைவர் சி.சிலம்பரசன் வரவேற்புரை ஆற்றினார்.



தாளாளர் எம் ஆர் இரகுநாதன் தலைமை தாங்கினார். இயக்குனர் இராஜமாணிக்கம் சிறப்புரையாற்றினார் கல்லூரி முதல்வர் சேகர் மற்றும் கல்லூரி துணை முதல்வர் சங்கீதா வாழ்த்துரை வழங்கினார். இதைத் தொடர்ந்து கல்லூரியில் நடைபெற்ற புகைப்பட கண்காட்சியில் இடம்பெற்ற சிறந்த படங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.


## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, முத்துக்காடு கிராமம் புதுவயல். **கருப்பையா மகன் முனியாண்டி** ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு: செம்பாட்டூரை சேர்ந்த சிதம்பரம் **அம்பலம் மகன்கள் வைரக்கண்ணு அம்பலம்,பழனியாண்டி அம்பலம்** ஆகியோரிடமிருந்து புஞ்சை நிலங்கள் கிரைய பத்திரம் பெற்று 27.01.1998 தேதியில் புதுக்கோட்டை சார் பதிவகத்தில் 265/1998 மற்றும் 23.08.1999 தேதியில் 2611/1999 ஆகிய எண்களாக பதிய பெற்ற சொத்தினை கிரையம் பெற்று அனுபவித்து வந்ததில் கிரைய ஆவணத்தை கடந்த 08.06.2023 அன்று புதுவயலில் இருந்து புதுக்கோட்டை வரும் வழியில் கருவேப்பிலான்கேட் அருகே காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொடர்புக்கு: க.முனியாண்டி,செல் நம்பர்: 8489514257**


# அதிமுக மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து தேவர்இன கூட்டமைப்பினர் மதுரையில் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஆக20–

அதிமுக மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து மதுரையில் தேவர்இன கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் தேவர் சமூகத்தினர் புறக்கணிக்கப்பட்டதாக ஆர்பாட்டத்தில் குற்றச்சாட்டு முன்வைத்தனர். மதுரை முனிச்சாலை சந்திப்பில் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து நூற்றுக்கணக்கானோர் முழக்கங்களை எழுப்பினர்.

தென் மாவட்டங்களுக்கு எடப்பாடி பழனிசாமி வரக் கூடாது என நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டு கண்டன முழக்கம் எழுப்பினர். எடப்பாடி பழனிசாமி அதிமுகவினுடைய பொதுச்செயலாளராக பதவி ஏற்றபின்பு முதல் முறையாக தென் மாவட்டத்தில் தன்னுடைய முழுமையான பலத்தை காட்ட வேண்டும் என்ற அடிப்படையில் மதுரை விமான நிலையம் அருகே இன்று மிகப்பெரிய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதனிடையே எடப்பாடி பழனிசாமி கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் இருந்தபொழுது 10.5 சதவீதத்தை வேறொரு சமூகத்திற்கு வழங்கி அதவும் அவர்களுக்கு வழங்காமல் ஏமாற்றம் செய்துள்ளதாக மேலும் தங்களுடைய சமுதாயத்தை முழுமையாக எந்தவித அரசு சலுகை கிடைக்காமல் ஏமாற்றிவிட்டதாகவும் கடந்த சில தினங்களாக, எடப்பாடி பழனிசாமி மதுரை வருகையை எதிரித்து அங்கங்கே போஸ்டர்கள் ஒட்டப்பட்டு கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே நேற்று எதிர்ப்பின் உச்சமாக மதுரை முனிச்சாலை சந்திப்பில் பெண்களும், ஆண்களும் எடப்பாடி பழனிசாமி மதுரைக்குள் வராதே என்கின்ற முழக்கத்தை முன்வைத்து போராட்டத்தை நடத்தினர். குறிப்பாக கடந்த அதிமுக ஆட்சியின் போது இந்த சமுதாயத்தை முழுமையாக ஏமாற்றி அவர்களுக்கு வரக்கூடிய சலுகைகளை வரவிடாமல் செய்து சமூகத்துக்கு முழுமையான துரோகத்தை விளைவித்திருப்பதாகவும், சமூகத்தை சார்ந்த அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கொடநாடு வழக்கில் குற்றவாளியாக இருக்கும் எடப்பாடி பழனிசாமியை கைது செய்ய வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழக்கங்களை எழுப்பினர் இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



# உலகில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் 7 முக்கிய களைச்செடிகளில் ஒன்றாக பார்த்தீனியம் உள்ளது

விஷப்பூண்டு என்று தமிழிலும் காங்கிரஸ் களை என்று பொதுப் பெயராலும் பார்த்தீனியம் ஹிஸ்டீரியோபோரஸ் லின்னேயஸ் என்று தாவரவியல் பெயராலும் அழைக்கப்படும் பார்த்தீனியம் எனும் விஷச்செடி காம்போசிட்டே (ஏஸ்டேரசியே) எனும் தாவரவியல் குடும்பத்தை சேர்ந்தது. இதன் பூர்வீகம் வடக்கு, தெற்கு மற்றும் மத்திய அமெரிக்க நாடுகள் ஆகும். இன்று இது ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் உள்ள நாடுகளுக்கும், மற்றும் ஓசியானியாவில் உள்ள நாடுகளுக்கும் பரவியிருக்கிறது. இன்று அந்தந்த நாடுகள் இதை ஒரு சாதாரண அந்நிய களைச்செடியாக அல்லாமல் இது ஊடுருவிய பகுதிகளில் அது ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளையும் அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகளையும் நன்கு உணர்ந்துள்ளன. இன்று இது உலகில் உள்ள எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் ஏழு முக்கிய களைச்செடிகளில் ஒன்றாக உள்ளது. ஒவ்வொரு நாடுகளில் ஒவ்வொரு விதமாக ஊடுருவி உள்ளன.

இந்தியாவை பொறுத்தவரை, 1950-களில் இந்தியா அமெரிக்காவிடம் இருந்து பிஎல்-480-ன் கீழ் கோதுமையை இறக்குமதி செய்தது. இது அப்போது இந்தியா அமெரிக்காவுடன் மேற்கொண்ட மிகப்பெரிய இறக்குமதி ஆகும். அப்போதைய காலகட்டத்தில் இது ஒரு மிக முக்கிய இறக்குமதியும்கூட. ஆனால், இக்கோதுமையுடன் அழையா விருந்தாளியாக இந்தியாவில் நுழைந்த பார்த்தீனியத்தை முதன் முதலில் மஹாராஷ்டிரா மாநிலத்தில் புனே நகருக்கு அருகில் ஒரு சாலையோர விஷ செடியாகவே 1956-ல் அறியப்பட்டது. இன்று இது காட்டுத்தீ போல விவசாய நிலம் மற்றும் காடுகளுக்கும் பரவியிருக்கிறது. மத்திய பிரதேச மாநிலத்தில் ஜபல்பூரில் அமைந்துள்ள களை அறிவியலுக்கான தேசிய ஆராய்ச்சி மையத்தின் தகவலின்படி, 1956-ல் மகாராஷ்டிராவில் தொடங்கிய இதன் பயணம் இன்று 19 மாநிலங்களில் (ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், சண்டிகர், டெல்லி, குஜராத், ஹரியானா, ஹிமாசால்பிரதேசம், ஜம்மு & காஷ்மீர், கர்நாடகா, கேரளா, மத்தியபிரதேசம், பஞ்சாப், மஹாராஷ்டிரா, ஒரிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்திரபிரதேசம் மற்றும் மேற்கு வங்கம்) சுமார் 35 மில்லியன் ஹெக்டர் பரப்பளவில் பரவியிருக்கிறது. இது இந்திய மொத்த நிலப்பரப்பில் 10.6 சதவிகிதம் ஆகும். இதில், சாலையோர மற்றும் விவசாயம் அல்லாத நிலப்பரப்பு, விவசாயநிலம் மற்றும் காடுகளும் உள்ளடக்கம்.

ஒவ்வொரு 10 வருடம் வாரியாக மற்றும் பல்வேறு வகையான நில அடிப்படையில் பார்க்கும்போது, 1955-1960 - களில் இது பரவி இருந்த பரப்பளவு வெறும் 0.5 மில்லியன் ஹெக்டர் அதுவும் விவசாய பயன்பாட்டுக்கு அல்லாத தரிசு நிலத்தில் மட்டுமே பரவி இருந்த பார்த்தீனியம் 1961-70 காலகட்டத்தில் 2.5 மடங்கு உயர்ந்து சுமார் 1.75 மில்லியன் ஹெக்டராக உயர்ந்தது. இக்காலகட்டத்தில்தான், விவசாய நிலத்தில் இது ஊடுருவியது அதன் பரப்பளவு சுமார் 0. 25 மில்லியன் ஹெக்டர் ஆகும். 1981-90 காலகட்டத்தில், இதன் பரப்பளவு சுமார் 7 மில்லியன் ஹெக்டர் ஆகும் இதில் விவசாயம் அல்லாத நிலத்தின் பங்கு 6 மில்லியன் ஹெக்டர் ஆகவும் விவசாய நிலத்தில் ஒரு மில்லியன் ஹெக்டர் ஆகவும் இருந்தது. இக்காலகட்டம்வரை, பார்த்தீனியம் எனும் விஷப்பூண்டு வனங்களுக்குள் நுழையவில்லை. 1991-2000 காலகட்டத்தில், இதன் பரப்பளவு சுமார் 10 மில்லியன் ஹெக்டரை எட்டியது இதில் பெரும்பாலும் விவசாயம் அல்லாத தரிசு நிலத்தில் ஊடுருவி இருந்தாலும் விவசாய நிலத்தில் ஊருருவி உள்ள பரப்பளவு முந்தைய 10 ஆண்டுகளை காட்டிலும் இரட்டிப்பாகி உள்ளது குறுப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில்தான், வனப்பகுதியில் இப்பார்த்தீனியம் ஊடுருவியது இதன் அளவு சுமார் 0.5 மில்லியன் ஹெக்டர் ஆகும்.

மொத்த விவசாய நிலத்தின் பரப்பளவான 195.22 மில்லியன் ஹெக்டருடன் ஒப்பிடும்போது இது பரவியிருக்கும் பரப்பளவு என்பது 7.29 சதவிகிதம் ஆகும். அதேபோல, மொத்த வனப்பகுதி பரப்பளவான 71.43 மில்லியன் ஹெக்டேருடன் பார்க்கும்போது இது சுமார் 2.79 சதவிகிதம் ஆகும். வனப்பகுதியை பொறுத்தவரை, ஒப்பீட்டு அளவில், அதிக அளவில் கர்நாடக வனப்பகுதியில் பார்த்தீனியம் ஊடுருவியுள்ளது. மொத்தத்தில், இது பாதித்த 19 மாநிலங்களில் ஒப்பீட்டு அளவில் 6 மாநிலங்களில் (உத்திரபிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா, பீகார் மற்றும் மத்தியபிரதேசம்) மட்டும் அதிக அளவில் உள்ளது இதில் தமிழ்நாடும் ஒன்று.



இது இன்று எங்கும் நிறைந்து இருக்கக் காரணம் இதற்க்கென்று இயற்கை எதிரிகள் இல்லாததால் இதன் இனப்பெருக்கத்தில் எந்தவித தடையும் இல்லாமல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது அதிக விதைகளை உற்பத்தி செய்யும் திறனை பெற்றிருக்கிறது அதாவது ஒரு செடி தன் வாழ்நாளில் 10000 முதல் 15000 விதைகளை உற்பத்தி செய்கிறது. நிலத்தில் விழும் விதை பல வருடங்கள் கழித்தும் ஈரம் பட்டால் முளைக்கும் திறன் உள்ளது. இதன் விதை மிகவும் லேசாக இருப்பதால் காற்றின் மூலம் விரைவாக பரவுகிறது. இது எல்லா பருவம் மற்றும் மண் வகைகளிலும் வளரக்கூடிய தன்மை உள்ளதாலும் மற்றும் கால்நடைகள் உண்ண விரும்பாத களை செடியாக இருப்பதும் ஆகும். இதுமட்டுமில்லாமல், இதற்கு எதிராக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்பதும் போதுமானதாக இருந்ததில்லை இதுவரை.

எந்த ஒரு தாவரத்தினாலும் அதனால் ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகளை அறியவேண்டியுள்ளது. அப்படிப்பார்த்தால்,பார்த்தீனியம் ஒரு சாதாரண அந்நிய களை செடியாக மட்டுமில்லாமல் விஷ செடியாகவும் உள்ளதால் இது மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் மற்றும் விவசாயத்திற்கும் ஏற்படுத்தும் பாதிப்புகள் நன்கு விளக்கப்பட்டு உள்ளது. பார்த்தீனியம் செடியில் உள்ள பார்த்தீனின் மற்றும் அம்புரோசின் என்கின்ற நச்சுப்பொருளால் மனிதர்களுக்கு தோல் அரிப்பு, கொப்பளங்கள், எக்சிமா ஆகிய தோல் வியாதிகளும், கண் எரிச்சல், மூச்சு திணறல் மற்றும் ஆஸ்துமா உள்ளிட்ட வியாதிகளை உண்டாக்குகிறது.

பொதுவாக, கால்நடைகள் பார்த்தீனிய செடியை உட்கொள்வதில்லை. ஆனால், தீவன பற்றாக்குறையினால் உண்ண நேர்ந்தாலோ, அடர்ந்த பார்த்தீனிய செடிகளின் வழியே நடக்க நேர்ந்தாலோ மற்றும் அதனை நுகரும் போதும் இதன் நச்சுத்தன்மை பரவி அதனால் வாய்ப்பகுதி மற்றும் குடல் பகுதியில் புண்கள், காய்ச்சல் மற்றும் அரிப்பு ஏற்படும். விவசாயத்தை பொருத்தவரை, களை வடிவில் உற்பத்தி செலவை கூட்டுகிறது. சில பகுதிகளில், அறுவடைக்கு சிறிது காலத்திற்கு பிறகு வயல் முழுவதும் இச்செடி நன்கு வளர்ந்து நிற்கிறது. இச்செடியை முன்பின் பார்த்திறாதவர்கள் ஏதோ பயிர்தான் விவசாயம் செய்துள்ளனர் என்று எண்ணத் தோன்றும்.பார்த்தீனியத்தின் மனித மற்றும் கால்நடை உபயோகங்கள் என்று சொல்லிக்கொள்ளும்படியாக எதுவும் தற்போது பயன்பாட்டில் இல்லை. இதனால், ஒவ்வொரு வருடமும் எதிர்மறை விளைவுகளால் ஏற்படும் பாதிப்புகளும் அதை தொடர்ந்து பொருளாதார இழப்புகள் மட்டுமே ஏற்பட்டு வருகின்றன. இப்பாதிப்பில் இருந்து விடுபட மக்கள் நல்ல முக கவசமும் கையுரையும் அணிந்து உடம்பில் எந்த பாகத்திலும் இந்த செடி படாதவண்ணம் உடை அணிந்து இக்களையை கையால் பிடுங்க வேண்டும். பூ பூக்கும் முன்னர் பிடுங்குவது நல்லது. சிலருக்கு ஒவ்வாமை ஏற்படும் அவர்கள் இதை தவிர்க்க வேண்டும்.

அதிகப்படியான பார்த்தீனிய களைகள் இருப்பின் அவற்றை அழிக்க பல முறைகள் பரிந்துரை செய்யப்பட்டு இருந்தாலும் அவற்றில் மிகவும் எளிமையானது 1 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் சாதாரண உப்பு சேர்த்து அத்துடன் 2 மில்லி காதி சோப்புக்கரைசல் சேர்த்து பூ பூக்கும் முன்னர் செடி மீது தெளிக்க வேண்டும். பார்த்தீனியத்திற்கு போட்டி செடியாக ஆவாரை, அடர் ஆவாரை, துத்தி மற்றும் கொழுஞ்சி வகை செடிகளை வளர்ப்பதன் மூலம் சாலையோர மற்றும் விவசாயம் அல்லாத நிலங்களில் பார்த்தீனியத்தின் பரவலை கட்டுக்குள் வைக்க முடியும்.

இப்படியாக ஒரு ஒருங்கிணைந்த பார்த்தீனிய களை மேலாண்மையை தொடர்ந்து 3 வருடங்கள் செய்துவர நல்ல பலன் கிடைக்கும். ஆனால், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்கள் பார்த்தீனியம் குறித்து பல வருடங்களுக்கு முன் தந்த பதில் என்னவென்றால் செடி கொடிகளை கண்டெல்லாம் மக்கள் பயப்படத்தேவையில்லை. நமக்கு இயற்கை விவசாயத்திற்கு அதிக அளவு எரு தேவைப்படுகிறது. ஆகவே, பாரத்தீனிய செடிகளை பிடுங்கி அவற்றை அடுக்கி சாணக்கரைசலை அவற்றின் மேலே தெளித்து கொஞ்சம் மண்புழுக்கள் விட்டால் உரம் ஆகிவிடும். சாண எரிவாயு தயாரிப்பில் பார்த்தீனியத்தை பயன்படுத்தி எரிசக்தியாக மாற்றிவிடலாம் என்பதாகும்.

தற்போது தமிழக அரசு தனது அங்கக வேளாண்மை கொள்கை 2023 வெளியிட்டு இயற்கை விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்துள்ளது. இதில் பார்த்தீனியத்தை பயன்படுத்தி மண் புழு உரம் தயாரித்து பயன்படுத்தும் வகையில் விவசாயிகளை ஊக்கப்படுத்தும்படியான திட்டத்தை இதில் சேர்க்க அரசு பரிசீலிக்க வேண்டும். மிக முக்கியமாக, வனத்தை ஒட்டிய விவசாய நிலத்தில் வளரும் பார்த்தீனீயத்தை கட்டுப்படுத்த முன்னுரிமை அளிக்கவேண்டும். இதன் மூலம் வனப்பகுதியில் இதன் பரவல் கட்டுக்குள் இருக்கும். அதேவேளையில், வனப்பகுதில் இருக்கும் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த தகுந்த முறையை கண்டறிய வேண்டியதும் அவசியம். ஆகஸ்ட் 16-22, 2023 என்பது 18 ஆவது தேசிய பார்த்தீனீய விழிப்புணர்வு வாரம் ஆகும்.

**தொகுப்பு:**
**ப.சந்திரசேகரன், கேர் எர்த் ட்ரஸ்ட்: சத்தியமங்கலம்**

# காரைக்காலில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மாவட்ட ஆட்சியர் ஆலோசனைக் கூட்டம்

காரைக்கால், ஆக,20

காரைக்கால் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு, அரசுத்துறையினருக்கு மாவட்ட ஆட்சியர் குலோந்துங்கன் அறிவுறுத்தினார்.

அண்டை மாநிலங்களில் ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுவரும் சூழலில்.காரைக்காலில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் குலோந்துங்கன் தலைமையிலும் நலவழித்துறை துணை இயக்குனர் சிவராஜ்குமார் முன்னிலையிலும் நாடைபெற்றது.

இக்கூட்டத்தில் அதிகாரிகளிடையே ஆட்சியர் பேசியது :டெங்கு காய்ச்சல் பரவாமலிருக்க மாவட்டம் முழுவதும் கொசு ஒழிப்புப் பணியை நகராட்சி,கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகத்தினர் நலவழித்துறையுடன் இணைந்து தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை தொடங்க இருப்பாதால் டெங்கு சிக்குன் குனியா போன்ற காய்ச்சல் அதிகமாக பரவ வாய்ப்பிருக்கிறது. எனவே தண்ணீர் தேங்காமல் இருக்கும் வகையில் முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். டெங்கு, சிக்குன்குனியா போன்ற காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்கள் உருவாகும் காரணிகளை அழிக்க வேண்டும். குறிப்பாக குப்பைகள் குவிந்து கிடக்காமலும் வீடு மற்றும் கட்டடங்களின் திறந்த வெளிப் பகுதியில் தண்ணீர் தேங்கும் வகையிலான பொருள்கள் இல்லாமலும் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு பொது மருத்துவமனையில் எந்தவொரு காய்ச்சலுக்கும் சிகிச்சை தரக்கூடிய வகையில் வசதிகள் தயார் நிலையில் இருக்க வேண்டும். கிராமங்கள் தோறும்,பள்ளி, கல்லூரிகளிலும், டெங்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்த நலவழித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் அறிவுருத்தினார்.

கூட்டத்தில் மருத்துவ கண்காணிப்பாளர் கண்ணகி நகராட்சி ஆணையர் சத்யா மேல்நிலை கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி, மீன் வளத்துறை துணை இயக்குநர் சவுந்தர பாண்டி முதன்மை கல்வி அதிகாரி விஜயமோகனா உள்ளிட்ட அனைத்து கொம்யூன் பஞ்சாயத்துகளின் ஆணையர்கள் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர். இந்த டெங்கு விழிப்புணர்வு கூட்ட ஏற்பாடுகளை நலவழித்துறையின் நோய் தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர். தேனாம்பிகை, கொசு மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்த்தடுப்பு திட்டத்தின் மாவட்ட தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் ஆகியோர் செய்திருந்தனர்.





மயிலாடுதுறை மாவட்டம் மன்னன்பந்தல் திமுக பிரமுகர் பிரகாஷ்- சூர்யாவின் மகள் சர்விதா முதல் பிறந்தநாள் விழாவில் குத்தாலம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் மங்கை சங்கர், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மங்கை உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றிய துணைச் செயலாளர் சுந்தர்ராஜன், இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா மற்றும் நகர இளைஞரணி செந்தில் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

### அறந்தாங்கி அருகே அரசர்குளர் கீழ்பாதியில்

# தேங்காய் விலையின் வீழ்ச்சியை கண்டுகொள்ளாத தமிழக அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

அறந்தாங்கி, ஆக.20-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே அரசர்குளர் கீழ்பாதியில் தேங்காய் விலையின் வீழ்ச்சியை கண்டுகொள்ளாத தமிழக அரசை கண்டித்தும் தேங்காயை அரசே கொள்முதல் செய்து பாமாயிலுக்கு பதிலாக ரேஷன் கடையில் தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வலியுறுத்தியும் தேமுதிகவினர் சாலையில் தேங்காய்களை உடைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்நிலையில் கடந்த சில வருடங்களாக தேங்காய் விலை படிப்படியாக குறைந்து தென்னை உப பொருட்களும் விலையில்லாமல் போனதால் விவசாயிகளின் நிலை பரிதாபமானது, சில வருடங்களுக்கு முன்பு வரை ரூ.15 வரை விற்ற தேங்காய் தற்போது ரூ.7 முதல் 8 க்கு விற்பனை ஆகிறது, மத்திய அரசு தேங்காய்க்கு ஊக்கதொகை வழங்க முன் வருவதோடு தமிழக அரசு ரேஷன் கடைகளில் பாமாயிலுக்கு பதிலாக தேங்காய் எண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வடக்கு ஒன்றியச் செயலாளர் சசிகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர் மன்மதன், அறந்தாங்கி தெற்கு ஒன்றியச் செயலாளர் பெரி. கலைஞர், திருவரங்குளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பவானந்தம்,பொன்னமராவதி வடக்கு ஒன்றியச் செயலாளர் தர்மலிங்கம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் குமார், திருமயம் ஒன்றியச் செயலாளர் சுப்ரமணியன் உள்ளிட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, கழக தேமுதிகவினர் நூற்றுக்கும் மேகற்பட்டோர் கலந்து கொண்டனர்.



▶ மதுரை சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சதுரகிரி மலை அருள்மிகு சுந்தர மகாலிங்கம் திருக்கோவில் ஆடி அமாவாசை திருவிழாவை முன்னிட்டு தாணிப்பாறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரசின் சாதனைகள், திட்டங்கள் மற்றும் நூற்றாண்டுகள் தொடர்பாக சிறப்பு புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.





▶ பொன்னமராவதியை அடுத்த கேசராபட்டி சி.டி. இன்டர்நேசனல் சீனியர் செகண்டரி பள்ளியில் சுதந்திரதின விழா மற்றும் 2ஆம் ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது, மதுரை மெட்ரோ பாலிஷ் ரோட்டரி சங்கத் தலைவர் இப்ராகிம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாவிற்கு தலைமை வகித்தார், பள்ளியின் நிறுவனர் மற்றும் தலைவர் பழ.சிதம்பரம் வரவேற்றார் தாளாளர் அன்னம் சிதம்பரம் முன்னிலைவகித்தார் முத்தமிழ்ப்பாசறை அறங்காவலர்குழுச்செயலாளர் நெ.இரா.சந்திரன் மற்றும் மதுரை ரோட்டரி மெட்ரோ பாலிஷ் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர் ,உடற்கல்வி ஆசிரியர் பாலமுருகன் ஆண்டறிக்கை வாசித்தார் முன்னதாக பொன்னமராவதி காந்தி சிலையிலிருந்து மாணவர்கள் ,ஆசிரியர்கள் பங்கேற்ற ஒலிம்பிக் சுடர் ஓட்டம் நடைபெற்றது இது அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது மேலும் சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் பள்ளி வளாகத்தில் 77 மரக்கன்றுகள் நடப்பட்டன,விழாவில் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர், இறுதியாக ஆசிரியை பிரவினா நன்றி கூறினார்.

# காசிமேஜர்புரத்தில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக மருத்துவ அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்

தென்காசி,ஆக.20-

தென்காசி மாவட்டம் காசிமேஜர் புரம் தனியார் திருமண மண்டபத்தில் வைத்து, தென்காசி தெற்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் கலந்து கொண்டு இலவச மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் தென்காசி ஒன்றியச் செயலாளர் அழகு சுந்தரம், தென்காசி நகரச் செயலாளரும், நகர் மன்ற தலைவருமான சாதிர், துணைத் தலைவர் சுப்பையா, ஊராட்சி மன்றத் தலைவர் குத்தாலம் இசக்கி பாண்டி, ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா, கிளை கழகச் செயலாளர்கள் நீலகண்டன், ஆறுமுகம், தென்காசி தெற்கு மாவட்ட மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் மாரிமுத்து, தென்காசி தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் அன்பரசன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதில் சர்க்கரை நோய், குழந்தைகளுக்கு ஏற்படும் ஆஸ்துமா, மற்றும் பொது மருத்துவம், மூட்டு வலி, முதுகு வலி, கழுத்து வலி, சம்பந்தமான பிரச்சனைகள் தோல் நோய்கள், உள்ளிட்ட அனைத்து நோய்களுக்குரிய சிறப்பு மருத்துவர்கள் தமிழரசன், செல்வ ரங்கராஜ், கௌதமி தமிழரசன், சிவசந்திரன், தமிழருவி, முத்துகுமாரசாமி உள்ளிட்ட மருத்துவர்கள் இதில் கலந்துகொண்டு பொது மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சையினை அளித்தனர், இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# புதுக்கோட்டையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு வழங்கும் நிகழ்ச்சி

புதுக்கோட்டை, ஆக. 20-

ரோட்டரி மாவட்டம் 3000தின் வழிகாட்டுதலின் படி புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கையேடு வழங்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை பிருந்தாவனத்தில் சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது.



சாலை விதிகளை மதிப்போம்! விபத்துகளை தவிர்ப்போம்! சாலை விதிகளில் நடந்து செல்லும் போது கூட்டமாக செல்லாமல் ஒருவர் பின் ஒருவராக செல்ல வேண்டும், சாலைகளை கடக்கும்போது இருபுறமும் நன்கு கவனித்து பின்பு சாலை கடந்து செல்ல வேண்டும். சாலையை கடக்கும் போது செல்போன் பயன்படுத்தக் கூடாது, சாலையை கடக்கும் போது முதலில் வலது புறம் பிறகு இடது புறம் பிறகு மறுபடியும் வலது புறம் கவனித்து சாலைகளை கடக்க வேண்டும், சாலையை கடப்பதற்கு என்று குறியிடப்பட்ட இடத்தில் மட்டும் சாலை கடந்து செல்ல வேண்டும்,

சாலைகளில் செல்லும்போதுபாதசாரிகளுக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் தான் செல்ல வேண்டும், இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது மிதமான வேகத்தில் வாகனத்தை ஓட்டி செல்ல வேண்டும் செல்போன் பேசிக்கொண்டு கட்டாயம் சொல்லக்கூடாது, அவசியம் (ஹெல்மெட்) தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும், மாணவியர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது சுடிதார் துப்பட்டாவை பின்புறமாக முடிந்து பாதுகாப்பாக செல்ல வேண்டும், இருசக்கர வாகனங்களில் இருவருக்கு மேல் செல்லக்கூடாது, சாலையில்வாகனவிபத்துக்கள் ஏற்பட்டால் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த முதல் உதவி செய்ய முன் வரவேண்டும், சாலை விதிகளை மதிப்போம் உயிர்பழியை தடுப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு கையேட்டினை நகர போக்குவரத்துக் காவல் துணை ஆய்வாளர் தமிழ்மணி வழங்கினார்.

தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்டி வந்தவர்களுக்கும், நான்கு சக்கர வாகனத்தில் சீட் பெல்ட் அணிந்து வந்தவர்களுக்கும் இனிப்பு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியினை ரோட்டரி மாவட்டம் 3000தின் அறம் ஆண்டின் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியின் சேர்மன் மாருதி கண.மோகன் ராஜா செய்திருந்தார் நிகழ்ச்சியில் சங்க செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வருங்கால தலைவர் தங்கராஜா, யோகேஸ்வரன், ராமகிருஷ்ணன் நிஜாம் முகமது, முகமது அப்துல்லா, ஜான்சிராணி, அன்பழகன், ஆரவாமுதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி பொறுப்புகளுக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் மாவட்டத் தலைவராக முத்துராமலிங்கம், துணைத் தலைவராக முத்து வேலன், மாவட்ட அமைப்பாளராக பிச்சையா, துணை அமைப்பாளர்களாக ஜெயக்குமார், அருணாசலம், காளி ராஜ், தனசேகரன், பிரபாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிதாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏவை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# நீட் தேர்வை ரத்து செய்யாத மத்திய அரசை கண்டித்து அரியலூரில் திமுக சார்பில் இன்று உண்ணாவிரத போராட்டம்

*அரியலூர், ஆக.20-*

*நீட் தேர்வை ரத்து செய்யாத மத்திய அரசை கண்டித்து, அரியலூரில் இன்று (20-ம் தேதி) கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.*

*மாணவர்களையும், பெற்றோர்களையும் மரணக்குழியில் தள்ளும், நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, திமுக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி உள்ளிட்ட அமைப்புகள் சார்பில், மாவட்டதலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அரியலூர் பழையபேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே, இன்று காலை 8 மணிக்கு துவங்கி, மாலை 5 மணி*



*வரை நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்திற்கு, திமுக அரியலூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜன் தலைமை வகிக்கிறார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்ராமராஜன் வரவேற்று பேசுகிறார்.*

*திமுகதுணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி, திமுக அரியலூர் மாவட்டச் செயலாளரும் போக்குவரத்து துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றுகின்றனர். ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், திமுகவின் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறுஅணிநிர்வாகிகள், உறுப்பினர்கள், உட்பட பலரும் பங்கேற்கின்றனர் உண்ணாவிரத போராட்டத்தின் முடிவில், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சஞ்சய் குமார் நன்றி தெரிவித்து பேசுகிறார்.*

# கடற்கரை ஒன்றிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சாதனை

மணமேல்குடி , ஆக.20-

கடற்கரை ஒன்றியங்கள் அளவிலான விளையாட்டுப் போட்டிகளில்மீமிசல்நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதலிடம் பிடித்துள்ளது.



ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்கள் அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேற்று மீமிசல் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் எரிப்பந்து போட்டியானது நடைபெற்றது. இவற்றில் நியூ சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி கரூர், அரசு உயர்நிலைப்பள்ளி பொன்னகரம், ஜெகதீஸ்வரர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாந்தாங்குடி, ஜெகதாபட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளி, புனித மரியன்னை ஆர்சி உயர்நிலைப்பள்ளி ஏக ஏகணிவயல், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி புதுக்குடி உள்ளிட்ட பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவியர் 14 வயது 17 வயது 19 வயதுக்குட்பட்டோருக்காண போட்டிகளாக மூன்று பிரிவுகளாக கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் மூன்று முதல் இடங்களையும், பெண்கள் பிரிவில் முதலிடமும், இரண்டு பிரிவுகளில் இரண்டாம் இடமும் பெற்று சாதனை படைத்தனர். கலந்து கொண்ட அனைத்து பிரிவுகளிலும் நியூ சங்கீத் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்றனர். முன்னதாக போட்டியினை பள்ளியின் தாளாளரும் முதல்வருமான ராமசாமி வாழ்த்து கூறி போட்டியினை துவக்கி வைத்தார்.

# தலைவர்கள் பிறந்தநாளையொட்டி பேச்சுபோட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

புதுக்கோட்டை, ஆக. 20-

தமிழ் வளர்ச்சித் துறையால் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி, அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்பெற்ற பேச்சுப்போட்டிகள் புதுக்கோட்டை, முதன்மைக்கல்வி அலுவலர் மஞ்சுளா பரிசு வழங்கினார்.



நாட்டுக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறையால் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பெற்று வருகின்றன. அவ்வகையில், 2023-24ஆம் ஆண்டுக்கு அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்றன.

புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா தலைமையேற்று, போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்கள். முதல் பரிசு ரூ.5000, இரண்டாம் பரிசு ரூ.3000, மூன்றாம் பரிசு ரூ.2000, அரசுப்பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப்பரிசு இருவருக்கு தலா ரூ.2000 என பரிசுத்தொகை வழங்கப்பெற்றன. முதன்மைக்கல்வி அலுவலர், போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் ஆசிரியப்பெருமக்களுக்கும், பெற்றோர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மேலும், மாணவர்களின் பேச்சாற்றலை வெளிக்கொணரும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் போட்டிகளில் கலந்துகொள்வதே மாணவர்கள் வெற்றியை நோக்கி வைக்கும் முதல்அடி என்றும், வெற்றி-தோல்வி இரண்டையும் ஏற்கும் மனநிலையை மாணவச்செல்வங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தோல்வி கண்டு துவளாமல் தோல்விக்கான காரணங்களை அறிந்து அவற்றைக் களைந்து வெற்றிபெற முயல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முதன்மைக் கல்வி அலுவலக சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில் வரவேற்புரையாற்றி போட்டி ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் சபீர்பானு முன்னிலையில் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்றன. பணிநிறைவு பெற்ற தமிழாசிரியர் திருப்பதி, பொன்னமராவதி, முத்தமிழ்ப்பாசறைத் தலைவர் சந்திரன், முதுகலைத் தமிழாசிரியர்கள் பாலசுப்ரமணியன், பரமசிவம் ஆகியோர் நடுவர்களாகச் செயல்பட்டனர்.

அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு முற்பகல் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வடவாளம் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி ச. சந்தியா முதல் பரிசும், புதுக்கோட்டை, கற்பக விநாயகா பதின்ம மேல்நிலைப்பள்ளி மாணவி ஹ. தேஜஸ்வினி இரண்டாம் பரிசும்,, புதுக்கோட்டை, திரு இருதய பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி பா.கௌசிகா மூன்றாம் பரிசும் பெற்றனர். அரசுப்பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப்பரிசுக்கு கறம்பக்குடி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி இரா. பரமளேஸ்வரி மற்றும் மண்ணவேளாம்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி க. சங்கீதா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு பிற்பகல் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் சுப்பிரமணியபுரம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி ச. ஸ்ரீநிஷா முதல் பரிசும், விராலிமலை, விவேகா பதின்ம மேல்நிலைப் பள்ளி மாணவி சி. நிரஞ்சனா இரண்டாம் பரிசும், இலுப்பூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி மு. தாமரைச் செல்வி மூன்றாம் பரிசும் பெற்றனர். அரசுப்பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப்பரிசுக்கு அன்னவாசல், அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி ரெ. சுவாதி மற்றும் திருமயம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி மு.நி. பைஜியத்துல் தௌபிகா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிறைவாக இராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தமிழரசி நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மருத்துவ மாணவர்களின் சுகாதார தத்தெடுப்பு களப்பயணம்

புதுக்கோட்டை, ஆக.20-

அண்டக்குளம் அருகே மருத்துவ மாணவர்களின் சுகாதார தத்தெடுப்பு களப்பயணம் நடைபெற்றது.



புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியின் சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்புதுறை மருத்துவர் கே.சரவணன் தலைமையில் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு பயிலும் 73 மருத்துவமாணவர்கள் சுகாதார தத்தெடிப்பிற்காக அண்டகுளம் அருகே உள்ள கடியாம்பட்டி கிராமத்திற்கு களப்பயணம் மேற்கொண்டனர். அங்கு சென்ற மாணவர்கள் சுகாதாரம் சார்ந்த தகவல்களை சேகரித்து ஒவ்வொரு மாணவரும் சுகாதாரத்தத்தெடுப்பிற்காக தலா ஐந்து குடும்பங்கள் வீதம் தத்தெடுத்து குடும்பத்தில் உள்ளவரின் தொலைபேசி எண்ணை மாணவர்கள் பெற்றுக்கொண்டர்.

தத்தெடுத்த 365 குடும்பத்தார்களிடமும் தங்களது தொலைபேசி எண்ணை கொடுத்து ஐந்து ஆண்டுகள் எம்பிபிஎஸ் டாக்டர் பட்டம் படித்து முடிக்கும் வரை ஒவ்வொரு மாணவரும் அந்த ஐந்து குடும்பத்திற்கு தேவையான மருத்துவ ஆலோசனைகள் தேவைப்படும் நேரங்களில் வழங்கி கண்காணித்து வரவேண்டும். அந்த ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்களுக்கும் கர்ப்பிணி பெண்கள் குழந்தைகளுக்கு தேவையான ஆலோசனைகளையும், அந்த மாணவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டும், மருந்துகள் எடுத்துக் கொள்வது பற்றியும் அவசரகால நேரங்களிலும் முதலுதவி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம் என்று குடும்பத்தாரிடம் கூறி களப்பயணம் முடித்தனர், பின்னர் கடியாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு உடல் நலன் குறித்து மருத்துவர் கே.சரவணன் கலந்து கொண்டு பேசினார்.














news25x33 updated 23 may-1.tif
PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# 9 ஆண்டுகளில் 162 நாடுகள் இந்தியாவில் 62 துறைகளில் முதலீடு

# 100 ஏக்கரை தானமாக கொடுத்தவருக்கு 2 ஏக்கர் நிலம் கொடுக்க மறுப்பது ஏன்





# மதுரையில் அதிமுகவின் பொன்விழா மாநாடு : தொண்டர்கள் குவிந்தனர்


சென்னை / புதுக்கோட்டை | 20.08.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

புதுமை
# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

செ. மாதவன் , தமிழக அரசியல்வாதி (பி.1933) (இ.2018)



ராஜீவ் காந்தி , இந்தியாவின் 6வது பிரதமர் (பி.1944) (இ.1991)



நா. ரா. நாராயணமூர்த்தி , இந்தியத் தொழிலதிபர் (பி.1946)



## இன்றைய நினைவு நாள்

ராம் சரண் சர்மா , இந்திய வரலாற்றாளர் (பி.1919) (இ.2011)



நரேந்திர தபோல்கர் , இந்திய எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி.1945) (இ.2013)



## உலகக் கொசு நாள்

## மத நல்லிணக்க தினம் (இந்தியா)